**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.**

2021 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 08ம் நாள் புதன் கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி.வி.லட்சுமி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 209/2014 வா.சா. 2 என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. பன்னீர்செல்வம் | வயது | .. 61 |
| த/பெ. | .. ராமசாமி | சாதி | .. |

**08.09.2021 - வா.சா.2 குறுக்கு விசாரணை.**

தாவா கிராமத்தில் நான் ஏற்கனவே ஊராட்சிமன்றத்தில் தலைவராக இருந்துள்ளேன் என்றால் சரிதான். காந்திநகர் எந்த ஊராட்சி என்றால் ஆத்தூர் ஊராட்சி. ஆத்துரை கிராம மக்கள் வழக்குச்சொத்தின் வழியாக தான் காந்திநகருக்கு செல்ல வேண்டும் என்றால் சரியல்ல. வேறு வழியாக செல்கிறார்கள். மெயின்ரோட்டிற்கு சென்று அங்கிருந்து ஏரிக்கரை வழியாக காந்திநகருக்கு செல்கிறார்கள். வா.சா.1 குறுக்கு விசாரணையில் ஆத்துரையில் இருந்து காந்திநகருக்கு எனது வீட்டிற்கு அருகில் உள்ள காலிஇடமான ஏரிக்கரை வழியாகதான் செல்கிறார்கள் என்று கூறியுள்ளது சரிதானா என்றால் சரிதான். அந்த காலி இடத்திற்கு வழியாக எத்தனை ஆண்டுகள் மக்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் நான் பிறப்பதற்கு முன்பாகவே மக்கள் அதனை பயன்படுத்தி வந்தார்கள். புளியமரம், வாழைமரங்கள், பூச்செடி, செப்டிக்டேங்க் ஆகியவை வைக்கப்பட்டுள்ள இடம் யாருக்கு சொந்தமானது என்றால் வாதியின் கணவருக்கு சொந்தமாகி அவர் வாதிக்கு செட்டில்மெண்ட் மூலம் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி இடத்திலுள்ள புளிய மரம் எத்தனை வருடங்களாக உள்ளது என்றால் சுமார் 100 வருடங்களாக இருக்கலாம். வாழைமரம், செப்டிக்டேங்க், பூச்செடிகள் உள்ள இடத்தை எவ்வளுவ நாட்களாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் பட்டா கொடுப்பதற்கு முன்பாக இருந்து

அனுபவித்து வருகிறார்கள். ஊராட்சிமன்றத்தின் சார்பாக இந்த ஊரில் அந்த பகுதி ரோடு போடும்போதுதான் அது வாதியின் கணவருக்கு சொந்தமான பட்டா இடம் என்று தெரியவந்தது. அப்போதில் இருந்து இன்று வரை அந்த இடத்தில் வாழைமரம், பூச்செடிகள் போன்றவை உள்ளது. மேற்படி வாதியின் கணவர் முனுசாமி பேரில் வழங்கப்பட்டுள்ள பட்டா இடத்தில் வீடு உள்ளதா என்றால் வாதியின் பெயரில் உள்ள பட்டா இடத்திலும் முனுசாமி பெயரில் உள்ள பட்டா இடத்திலும் சேர்ந்தார்போன்று வீடு கட்டப்பட்டுள்ளது. நான் ஊராட்சிமன்ற தலைவராக இருந்தவரையில் பட்டாம்மாள் ஒரு வீட்டிற்கு மட்டும்தான் வரி கட்டியுள்ளார் என்றால் சரிதான். முனுசாமி எதாவது வரி கட்டியுள்ளாரா என்றால் இல்லை. பட்டா என்பது வீட்டுமனை இல்லாதவர்கள் அரசாங்கத்தால் கொடுக்கப்படுவது என்றாலும் குடும்பத்தில் ஒருவருக்குதான் அவ்வாறு கொடுக்கப்படுவது என்றாலும் சரிதான். ஒரே குடும்பத்தில் உள்ள கணவன் மற்றும் மனைவி பெயரில் தனித்தனியாக ஒரே நாளில் பட்டா கொடுக்க மாட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி வாழைமரம், செப்டிக்டேங்க் அமைந்துள்ள இடமானது பொதுப்பணி துறைக்கு சொந்தமான ஏரிக்கால்வாயின் கரைமீது அமைந்துள்ளது என்றால் சரிதான். செப்டிக்டேங்க்கிற்கும் வாதியின் வீட்டிற்கும் 4 அடி இடைவெளி இருக்கும் என்றால் சரிதான். வழக்குச்சொத்திற்கு இரண்டு பக்கமும் அரசாங்கத்தால் தார்சாலை அமைக்கப்பட்டு வழக்கு சொத்து மட்டும் பிட்டாக தார்சாலை அமைக்கப்படாமல் உள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அங்கு சாலை அமைக்காமல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தால் கொடுக்கப்படும் பட்டா இடத்தில் பட்டா கொடுத்து 3 ஆண்டுகளுக்கு மேலாக வீடு கட்டவேண்டும் என்ற நிபந்தனை உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது (மேற்கண்ட கேள்வியை இந்த சாட்சியிடம் கேட்பதற்கு வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது). தாவா ஆ அட்டவணை சொத்தில் வாதி வீடு கட்ட அனுபவிக்கவில்லை என்றாலும் பலவருடங்களாக மக்கள் சென்றுவர ஆ அட்டவணை சொத்தில் பயன்படுத்தி வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. வாதி எனக்கு சித்தி முறை வேண்டும். அதனால் அவர்களுக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(Sd)/D.Ravi,

District Munsif,
Polur.